தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 85630

நம் நாடு

தி.மு.கழக நாளிதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✠ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: புரட்டாசி 7உ சனி (22—9—56) ★ ★ வெளியூர்: புரட்டாசி 8உ ஞாயிறு (23—9—56) [இதழ் 89

டில்லி அமைச்சரே நேரில் கண்டாராம்!

சென்னை, செப். 21—

இந்திய அரசாங்கத்தின் உணவு மந்திரி கிருஷ்ணப்பா சென்னை மாநிலத்தின் உணவு நிலையைக் கண்டறிய சுற்றிய போது உண்மை நிறைந்த அனுபவத்தை நேரில் கண்டுள்ளாராம்.

டி. யு. சி. எஸ். நிறுவனத்தில் அரசாங்கம் தரும் அரிசியை நியாய விலைக்கு விற்க ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கப் பட்டிருக்கிறது அல்லவா? ஆனால், அமைச்சர் அங்கு சென்று பார்த்தபோது, அந்நிறுவனத்தின் சார்பில் கொள்முதல் செய்யப் பட்ட அரிசியே அதிகப்படியான விலையில் விற்கப்படுவதைக் கண்

(4-ம் பக்கம் பார்க்க)

சாமியின் சவம் அடக்கம் செய்யப்பட்டது

ஊர் முழுவதும் சோகத்துடன் திரண்டிருந்த பெருங் காட்சி

தொழிற் சங்கத் தலைவருக்குத் தொழிலாளர்களின் இறுதி மரியாதை

சவ ஊர்வலத்தில் பொதுச்செயலாளரும் இலட்சக்கணக்கானவர்களும் கலந்து கொண்டனர்

(நமது நிருபர்—டிரங்க் போன் மூலம்)

தூத்துக்குடி, செப். 22—

தூத்துக்குடி செயல்வீரர் கே. வி. கே. சாமியின் சவம் நன்கு அலங்கரிக்கப்பட்ட பல்லக்கில் கிடத்தப்பட்டு, பல வண்ண மலர்களால் மூடப்பட்டிருந்தது.

சவம் முக்கிய வீதிகள் வழியாக எடுத்துச் செல்லப்பட்டது.

சவ ஊர்வலத்தில் தி. மு. கழகப் பொதுச்செயலாளரும், உள்ளூர் வெளியூர் கழக முக்கியஸ்தர்கள் பலரும் பங்கு கொண்டனர்.

சவ ஊர்வலத்தில் ஊர் மக்கள் அனைவருமே திரண்டு வந் திருந்தனர் எனக் கூறுவது மிகையாகாது.

ஏராளமான கழகக் கொடிகளைத் தாங்கிய கழக வீரர்கள் சவத்திற்கு முன் அணிவகுத்துச் சென்றனர்.

மறைந்த கழக வீரருக்குத் தங்கள் இறுதி மரியாதையைச் செலுத்திக் கொள்ளும் வகையில் ஊர் முழுவதும் கடைகள் அடைத்துக் கிடந்தன; ஆலைகள் மூடிக் கிடந்தன. ஆலைத் தொழிலாளர்களும், உப்பளத் தொழிலாளர்களும், முனிசிபல் ஊழியர்களும், காலஞ் சென்ற தொழிற் சங்கத் தலைவருக்குத் தங்கள் ஆழ்ந்த துக்கத்தை அறிவிப்பதற்கு அறிகுறியாக, பணி மேற்கொள்ளாது சவ ஊர்வ லத்தில் கண்களில் நீர்வழியக் கலந்து கொண்டனர்.

நாகம்மை வாசகசாலையிலிருந்து மாலை புறப்பட்ட சவ ஊர்வலம், இரவு எட்டு மணிக்கே இடுகாட்டை அடைந்தது. அதன் பிறகு அடக்கம் செய்யப்பட்டது.

கழகத் தொடர்புடைய படிப் பகங்கள், சங்கங்கள், மன்றங்கள் ஆகியவற்றின் சார்பாகவும், பலதிறப்பட்டத் தொழிற் சங்கங்களின் சார் பாகவும், தி. மு. கழகத் தலைமை நிலையத்தின் சார் பாகவும், அகால மரணம் அடைந்த சாமிக்கு மலர் மாலைகள் அணிவிக்கப்பட் டன.

தூத்துக்குடியே மாவீரனின் பிரிவால் சோகத்தில் ஆழ்ந் திருக்கிறது என்றே கூற லாம்.

காலஞ்சென்ற சாமி தொழி லாளர்களுக்குச் செய்த சேவையையும், கழகத்திற்கு ஆற்றிய பணியினையும் பாராட்டிப் பேசாதவர் எவரு மில்லை.

சாமியின் இழப்பை ஈடுசெய் வது விரைவில் இயலாது எனத் தொழிலாளர்கள் மன முடைந்து பேசிக்கொள்ளு கின்றனர்.

கழகத் தோழர்களும் பெரும் கவலையிலும் சொல்லொணுத் துயரத்திலும் ஆழ்ந்துள்ள னர்.

தரப்பட்ட உதவிகள் எம்மாநிலத்திற்கோ!

புதுடில்லி, செப். 21—

ஜூன் 30-ந் தேதியோடு முடி வடைந்த ஆண்டில் பல்வேறு தொழில்களின் அபிவிருத்திக்குத் தொழில் நிதி கார்ப்பரேஷன் நிறு வனம் ரூ. 15 கோடிக்கு மேல் கடனளித்திருப்பதாகக் கூறப்பட் டுள்ளது.

இதுவரையில் 154 தொழில் களுக்கு வழங்கியுள்ள கடன்களின் மொத்த மதிப்பு ரூ. 43,20,00,000 என்று தெரியவருகிறது.

சர்க்கரைத் தொழில் அபிவிருத் திக்குத்தான் உயர்ந்த அளவாக ரூ. 7 கோடி தரப்பட்டதாம்.

அந்நிய நாட்டினர் சுரண்டல் இல்லை?

புதுடில்லி, செப். 21—

அந்நிய நாட்டினர் அளிக்கும் உதவியுடன் ஆண்டுதோறும் 40,000 'ரேடியோ செட்'டுகளைத் தயாரிக்கும் திட்டத்தை இந்திய அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ள தாகத் தெரிகிறது.

இன்று (22-9-56) மாலை சிந்தாதிரிபேட்டையில் அனுதாபக் கூட்டம்

துணைப் பொதுச்செயலாளர் கலந்துகொள்கிறார்

சென்னை—

சிந்தாதிரிப்பேட்டை தி. மு. கழக ஆதரவில் இன்று மாலை 6 மணிக்கு, நேப்பியர் பார்க் அடுத்த ரிச்சி தெருவில் அனுதாபக் கூட்டம் தோழர் மணிவண்ணன் தலைமையில் நடைபெறும். துணைப் பொதுச்செயலாளர் என் வி. நடராசன், தோழர் ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ., மற்றும் பலர் பேசுவர் என்று கிளைக் கழகச் செயலாளர் அ. ச. வேலன் அறிவிக்கிறார்.

★

சென்னைத் தோழர்கள் பெருந்துக்கத்தில் ஆழ்ந்தனர்

கழகக் கொடிகள் தாழ இறக்கப்பட்டன

தலைமை நிலையத்திற்கு நேரிலும், 'போனி'லும் ஏராளமான தோழர்கள்

"நெல்லை மாவட்ட தி. மு. கழகச் செயலாளரும் மத்திய செயற் குழு உறுப்பினருமான தோழர் கே. வி. கே. சாமி அவர்கள் படுகொலை செய்யப்பட்டார் என்ற செய்தி பரவியதும், சென்னை நகரிலுள்ள கிளைக் கழகங்களின் நிர்வாகிகளும் கழக ஆதரவாளர் களும், 'அறிவக'த்திற்குத் திகைப்புற்றவர்களாய் விரைந்தோடி வந்தனர்.

அறிவகத்தில், துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்களைச் சந்தித்து விவரம் அறிந்த அத்தோழர்களெல்லாம் கண் கலங்கி நின்றனர். நேற்று காலையிலிருந்தே சென்னை நகரிலும் வெளியூர்களிலிருந்தும் ஏராளமான தோழர்கள் டெலிபோன் மூலம் செய்தியைக் கேட்டவண்ணமிருந்தனர்.

இன்று காலை தோழர்கள் க. அன்பழகன், அலமேலு-அப்பாதுரை, எஸ். எஸ். பி. லிங்கம், மற்றும் பல வெளி யூர் தோழர்கள் தலைமை நிலை யத்திற்கு வந்திருந்து விவரம் அறிந்து மிகவும் வருந்தினர்.

நேற்று சென்னை சட்டசபைக் கூட்டமாதலால் இச்செய்தி சட்டசபை உறுப்பினர் களுக்கும் தெரியவந்தது. பிற்பகல் மாலை 4-மணிக்கு தென் ஆற்காடு மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ., அவர்களும் மற்ற தோழர்களும் தலைமை நிலையத்திற்கு வந்து துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்களுடன் நீண்டநேரம் பேசியிருந்த னர். தோழர் கோவிந்தசாமி யும் மற்றத் தோழர்களும் பெரிதும் வருந்தினர்.

நேற்று சென்னையிலுள்ள தி. மு. கழகக் கிளைகளிலெல்லாம் கழகக் கொடிகள் தாழ இறக்கப்பட்டன.

மாவீரர் கே. வி. கே. சாமி படுகொலை செய்யப்பட்ட செய்தியை, சென்னையின் முக்கியவீதிகளிலெல்லாம்கழ கத் தோழர்கள் எழுதிப் பொதுமக்களுக்கு அறிவித்தனர்

சென்னையின் பல இடங்களில் கழகத் தோழர்கள் கருப்புச் சின்னம் அணிந்திருந்தனர். தோழர் கே. வி. கே. சாமி கோரக் கொலை செய்யப் பட்ட இச்செய்தி, சென்னை நகரிலும் வெளியூர்களிலும் பரபரப்பை உண்டாக்கி யிருக்கிறது.

மதுரைத் தோழர்களின் மன அதிர்ச்சி

செய்தி கேட்டுப் பதறினர்; கதறி அழுதனர்

மறைந்த மாவீரனுக்கு இறுதி வணக்கம் செலுத்தினர்

தூத்துக்குடித் தோழர் கே. வி. கே. சாமி அவர்கள் கொலை செய்யப்பட்ட செய்தி மதுரை நகருக்குக் கிடைத்தவுடன், கழகத் தோழர்களெல்லாம் திகைப்புற்றனர்; திடுக்கிட்ட னர்; மன அதிர்ச்சியடைந்தனர்.

இச்செய்தி உண்மைதானு என்பதைத் தூத்துக்குடிக்கு 'டெலிபோன்' மூலம் கேட்டு விவரம் அறிந்து பதறினர்.

மதுரை நகரிலுள்ள கிளைகளில் எல்லாம் கழகக் கொடிகள் தாழப் பறக்கவிடப்பட்டன. சாலைகளில் எல்லாம் இக் கொலைச் செய்தி எழுதப்பட் டது. தி. மு. கழகத் தோழர் களும் அனுதாபிகளும் கருப் புச் சின்னம் அணிந்திருந்த னர்.

'தோழர் கே. வி. கே. சாமி கோரக் கொலைக்கு ஆளானர்' என்ற செய்தியைக் கேட்டக் கழகத் தோழர்களில் சிலர் கதறி அழுதுவிட்டனர்.

பொதுச்செயலாளர்

இரா. நெடுஞ்செழியன்

தோழர் கே. வி. கே. சாமியின் மறைவு பற்றியச் செய்தி அறிந்து மதுரையிலிருந்து தூத் துக்குடி சென்றிருந்த பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழி யன் அவர்கள் 21—9—56 இரவு 10 மணிக்குத் தூத்துக் குடியிலிருந்து புறப்பட்டுவிட் டார் என்றும், 23—9—56 திருச்சிப் பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு 24—9—56 சென்னைவந்து சேருவார் என் றும் தூத்துக்குடியிலிருந்து செய்தி அறிவிக்கப்படுகிறது.

அனுதாபக் கூட்டம்

23—9—56 காலை சென்னை - 8-வது வட்ட தி. மு. கழகச் சார் பில், கழகப் பணி மனை (28, ஜின்டா சாபு தெரு)வில், கே. வி. கே. சாமி அவர்களின் மறைவு குறித்து, தோழர் சி. ஆர். பாலசுந் தரம் தலைமையில் ஓர் அனுதாபக் கூட்டம் நடைபெறும்.

தூத்துக்குடியில் மற்றொரு கொலை

கிராம முனிசீப் வெட்டுண்டார்

தூத்துக்குடி, செப். 21—

தவசிபுரம் கிராம முன்சீப் ஆறு முகம்பிள்ளை இன்று பகல் அவரது வீட்டில் தூங்கிக் கொண்டிருந்தபோது, மூன்று பேர் அவரைத் தாக்கி இடது கையை வெட்டியதாகவும், தப்பி ஓடமுயன்ற அவரைப் பின்தொடர்ந்து சென்று வெட் டிக் கொன்றதாகவும் தகவல் கிடைத்திருக்கிறது.

போலீசார் புலன் விசாரித்து வருகின்றனர்.

அணு ஆயுத பரிசோதனைகளும் பயிர் பச்சைகளிடையே அதிகமான அணு கதிரியக்கம் இருப்பதாக ஜெர்மன் தென்பகுதியில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாம்.

நம் நாடு

தி. மு. க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 22–9–'56 சனி

மாவீரர் மறைவு

★

தூத்துக்குடித் தோழர் கே. வி. கே. சாமி அவர்கள் நேற்று முன்தினம் கோரக் கொலையுண்ட செய்தி, நம்மைத் திடுக்கிட வைத்துவிட்டது. சோகக் கடலின் ஆழத்தில் அமிழ்த்தப்பட்டிருக்கிறோம். தி. மு. கழகமும், குறிப்பாகத் தூத்துக்குடி நகர மக்களும் ஈடு செய்ய முடியாத ஒரு மாவீரனை இழந்துவிட்டனர்.

தோழர் சாமி அவர்கள், சுயமரியாதை இயக்கக் காலத்திலிருந்து பொதுப் பணியிலீடு பட்டுவந்தார்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் நெல்லை மாவட்டச் செயலாளராகவும், மத்திய செயற்குழு உறுப்பினராகவும் அவர் தீவிரமான—சிறப்பான பணியாற்றிவந்தார். தூத்துக்குடி நகரில் குறிப்பாகவும் நெல்லை மாவட்டத்தில் பொதுவாகவும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆக்கத்திற்கும் வளர்ச்சிக்கும் அவர் ஆற்றிய அரும்பணி அளவிட முடியாததாகும்.

தொழிலாளர்களுக்காகப் பேசுவதற்கே தாங்கள்தான் உரிமையுடையவர்கள்—தொழிலாளர்களின் நலன்களுக்காகப் பாடுபடுவதற்குத் தங்களால் மட்டுமே இயலும் என்று கம்யூனிஸ்டுகள் ஏகபோகமாக உரிமை கொண்டாடித் திரிவது தவறு என்பதை நிரூபிக்கும் வகையில், தூத்துக்குடி நகரின் பல பகுதிகளிலும் உள்ள பல துறைத் தொழிலாளர்களையும் சங்க ரீதியில் ஒற்றுமைப்படுத்தித் தொழிலாளர்களது ஒற்றுமைக்கு ஒரு சக்தி உண்டு என்று உணரச் செய்து, அவர்களுடைய நலன்களுக்காகப் போராடிப் பெருமை பெற்றவர் தோழர் கே. வி. கே. சாமி. ஆலைத் தொழிலாளர்கள், உப்புத் தொழிலாளர்கள் என்று பல துறைத் தொழிலாளர்களின் நல்வாழ்விற்கான போராட்டத்திற்கே தன் வாழ்வை அர்ப்பணித்திருந்தார் தோழர் கே. வி. கே. சாமி அவர்கள் என்றால், அது மிகையாகாது. பலரது போட்டி, பொறாமைகளுக்கிடையேயும், தொழிலாளர் பெருமக்களின் முழு நம்பிக்கைக்கும் பாத்திரமானவராகிச் சிறப்பான பணிபல புரிந்தவர் தோழர் சாமி அவர்கள்.

கழகத்தின் இலட்சியத்திற்காக எதையும் செய்யும் திறமும் பேராற்றலும் படைத்தவர்; கழகக் கொள்கைகளில் நீங்காத பற்று கொண்டவர் என்ற முறையில், அவர், நகரில் உள்ள மாற்றுக் கட்சிகளிலுள்ள சில நல்லறிவாளர்களாலும் பண்பாளர்களாலும் பாராட்டப்பட்டவர்.

தி. மு. கழகம் கடந்த 1953-ம் ஆண்டு ஜூலைத் திங்களில் நடத்திய மும்முனைப் போராட்டத்தின்போது, தோழர் சாமி அவர்கள், இதர கழகத் தோழர்களோடு ஒரு பெரும் சதிவழக்கில் ஈடுபடுத்தப்பட்டார். ஆனால் பல நாள் சிறைவாசத்திற்குப் பிறகு, அவ்வழக்கில் வெற்றி பெற்றார். அந்த நாட்களிலேயே இவரை எப்படியேனும் தொலைத்துவிட வேண்டும் என்று சில பொல்லாங்குக்காரர்களின் சிறுமதி நினைத்தது உண்டு.

கழகத்திற்காக இவர் ஆற்றுகிற அரும்பணி கழகத்திற்குத் தேடித்தருகிற ஆக்கத்தையும், தொழிலாளர் பெருமக்கள் இவர்பால் காட்டிவந்த அன்பையும் ஆதரவையும் கண்டு பொறாத சில புல்லறிவாளர்கள்—புன்மதியாளர்கள் பலர், இவருக்கு விரோதிகளாயிருந்தால் அதில் ஆச்சரியப்படுவதற்கு ஏதுவும் இல்லை. ஏனெனில், அத்தனை சிறப்பானப் பணியாற்றி வந்தார்.

நகரசபை உறுப்பினராயிருந்துகொண்டும் நகர மக்களின் நலன்களுக்காக இடைவிடாது பணியாற்றிவந்தார்.

அவரைப் போன்ற மக்கள் தொண்டர்களுக்கு—அரசியல் வாழ்வில் ஈடுபட்டோருக்கு, இது போன்றக் கொடுமை நிகழுவது சகித்துக்கொள்ள முடியாததாகும். அவரது இழப்பு, கழகத்திற்கு ஈடு செய்யப்பட முடியாத ஒன்று என்பதுடன், தூத்துக்குடி நகர மக்களுக்குப் பேரிழப்பாகும்.

எதிர்ப்புகளுக்கு அஞ்சாத நெஞ்சமும் சிறந்த தொண்டுள்ளமும், இலட்சியப் பிடிப்பும் கொள்கைப் பற்றும், பேராற்றலும் படைத்த சாமி அவர்களது மறைவு நமக்குத் தந்துள்ள துக்கத்தை இங்கே எழுதிக்காட்ட முடியாது.

மறைந்த அந்த மாவீரனுக்கு நமது வீர வணக்கத்தைச் செலுத்துகிறோம். அவரது தொண்டுள்ளம் என்றும் வாழ்க. அவர் நாமம் என்றும் நிலைக்க—அவர் விட்டுச்சென்ற பணியினைத் தொடர்ந்து மேற்கொள்ள—அவரைப் போன்ற அஞ்சாநெஞ்சர்கள் ஆயிரக்கணக்கில் இருக்கிறார்கள், இனி மேலும் எழுவார்கள் என்பதை நினைத்து, அவரது உறவினர்கள் ஆறுதல் பெற விழைகிறோம்.

வாழ்க சாமி! வாழ்க அவரது தொண்டுள்ளம்!

தென்னாட்டில் வடவர் சுரண்டல்

ஏழு தலைமுறைக்கான செல்வத்தை ஒரு பிரகாசாவின் குடும்பம் கொள்ளையடித்திருக்கிறதே

ஆயிரம் வடவர் குடும்பங்கள் வாரிச் செல்வது எவ்வளவு?

விடுதலை நாளில் காஞ்சி—மணிமொழியார் கேள்வி

கடந்த 18-9-56 அன்று மாலை சென்னை திரு. வி. க. திடலில் நடைபெற்ற திராவிட நாடு விடுதலை நாள் பொதுக்கூட்டத்தில் தோழர் காஞ்சி-மணிமொழியார் அவர்கள் ஆற்றிய உரையின் சாரம் கீழே தரப்படுகிறது:—

"வெள்ளைக்காரன் காலத்தில், சைமன் கமிஷன் என்ற ஒன்று இங்கிலாந்திலிருந்து இந்தியாவிற்கு வருகிறது என்று சொன்னால், உடனே இந்தியாவில் உள்ள கவர்னர்கள், ஆங்காங்கே உள்ள போலீசாரை உஷார் படுத்துவார்கள்; இராணுவத்திற்கு விசேட பயிற்சி தந்து தயாராக வைத்திருப்பார்கள். 'வருகிற கமிஷன் வெள்ளைக்காரர்கள் கமிஷன்; இங்கே வாழ்பவர்களோ இந்தியர்கள்; இவர்களுக்கு வெள்ளைக்காரன் அன்னியன் என்ற காரணத்தினால் இயற்கையாகவே அவர்கள்மீது வெறுப்பு உண்டு; அந்த வெறுப்புக் காரணமாக சைமன் கமிஷனை இவர்கள் ஏதேனும் கெடுத்துவிடுவார்கள்' என அஞ்சித்தான், போலீசாரை உஷார் படுத்துவதையும், இராணுவத்தைத் தயாரில் வைத்திருப்பதையும் வெள்ளைக்கார ஏகாதிபத்திய வாதிகள் மேற்கொண்டு வந்தனர்.

என்ன பொருள் இதற்கு?

"இன்று என்ன நிலைமை? குடியரசுத் தலைவர் என்று கூறிக்கொண்டு டாக்டர் இராசேந்திர பிரசாதோ, பிரதமர் என்று கூறிக்கொண்டு பண்டித நேருவோ இங்கு வருகிறார்கள் என்றால், போலீஸ் படை நகர் முழுவதும் ஆக்கிரமித்துக்கொள்கிறதே!

"சைமன் கமிஷன் வெள்ளைக்காரர்களடங்கியது; வெள்ளையர் அன்னியர்; ஆகவே அவனுக்கு பலத்த போலீஸ் பாதுகாப்பும் இராணுவப் பாதுகாப்பும் தேவைப்பட்டது.

"அதுபோலவே இராசேந்திரருக்கும் நேருவுக்கும் இங்கு எதற்காகப் பாதுகாப்புத் தேவை? வெள்ளையருக்குத் தரப்பட்டதைப் போலவே இவர்களுக்கும், அதைவிட அதிகமான அளவில் பாதுகாப்புத் தேவைப்படுகிறது என்று கூறினால், என்ன பொருள் அதற்கு? இவர்கள் இந்த நாட்டு மக்களின் தலைவர்களானால், இவர்கள் இந்த நாட்டு மக்களின் நம்பிக்கையைப் பெற்றிருப்பார்களல்லவா? அப்போது இவ்வளவு பெரிய பாதுகாப்பு ஏற்பாடுகள் தேவையில்லாமலிருக்குமே!

"இப்போது குடியரசுத் தலைவரோ, நேருவோ வருகிறார்கள் என்றால், அதற்காகப் பாதுகாப்புக்கெனச் செலவிடப்படும் இலட்சக்கணக்கான ரூபாய் நமது வரிப் பணத்திலிருந்து செலவிடப்படுவது எதைக் காட்டுகிறது?

மனம் நோகாமல் இருக்கமுடியுமா?

"சென்னையில் திருமதி கிளப்வாலா அவர்கள் சுமார் ரூ. 12,000 பெறுமான கட்டிடம் ஒன்றைக் கட்டியிருக்கிறார்கள்; அது ஏற்கனவே ஒரு பிரமுகரால் திறந்துவைக்கப்பட்டுவிட்டது; ஆனால், அந்தக் கட்டிடத்திற்கு குடியரசுத் தலைவர் இராசேந்திர பிரசாத் வந்து போவதற்காகப் போலீசார் பாதுகாப்புத் தந்த வகையில் மட்டும் சுமார் 25 ஆயிரம் ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறது.

"இந்தத் தொகை இந்த நாட்டில் ஏழை எளியோரிடமிருந்து வாங்கப்படும் வரிப் பணத்திலிருந்து செலவிடப்படுகிறது என்பதை அறியும்போது மனம் நோகாமல் என்ன செய்யும்?

நம் நாட்டுச் செல்வம் கொள்ளை போகிறது!

"இன்று நமது திராவிடம் கதவில்லாத வீடாக இருக்கிற காரணத்தினால்தான் கோடி கோடியான நமது வரிப்பணம் பாழாகிறது என்பது மட்டுமின்றி நமது நாட்டுச் செல்வமும் கொள்ளை போய்க் கொண்டிருக்கிறது.

"இந்த மாநில கவர்னர் ஒரு முறை கூறினார்—தனது முன்னோர்கள் இங்கேவந்து வியாபாரம் நடத்தியதாகவும், அப்போது அவர்கள் ஏழு தலைமுறைகளுக்குத் தேவையான அளவுக்கு இங்கே சம்பாதித்திருப்பதாகவும் கூறினார். ஒரு பிரகாசாவின் உறவினர்கள் இந்த நாட்டிலிருந்து தங்களுக்கு ஏழு தலைமுறைகளுக்குத் தேவையான அளவு சம்பாதித்துக் கொண்டு செல்கிறார்கள் என்றால், பிரகாசாவின் குடும்பத்தைப் போன்று இங்கே ஆயிரக்கணக்கான வடநாட்டுக் குடும்பங்கள் இன்னும் கொள்ளையடித்துக் கொண்டிருக்கின்றனவே! அவை எல்லாம் எத்தனை கோடி கோடியாக நமது நாட்டுச் செல்வத்தைச் சூறையிட்டிருப்பார்கள்? இந்த அநியாயமான கொள்ளை—சுரண்டல் நீடிப்பது எதனால்? நமது நாடு கதவில்லாத வீடு போன்று, எவர் வேண்டுமானாலும் வந்து, எதை வேண்டுமானாலும் கொள்ளையிட்டுச் செல்லலாம் என்ற நிலையில் இருப்பதினால்தானே! அதனால்தான், 'வீட்டிற்குக் கதவு போட வேண்டும்' என்கிறோம்! நாட்டிற்கு 'எல்லைக்கோடு' வேண்டும் என்கிறோம்!

'கொள்ளை'க்கு இவர்கள் பாதுகாவலர்கள்?

"இந்தத் திறந்த வீட்டை காவல் காப்பதற்கென்று இங்கே உள்ள காமராசர்கள், திருடர்களுக்குத் துணை போகிறவர்களாக இருக்கிறார்கள். வடநாட்டுக் கொள்ளைக்கு இந்த நாட்டைக் காட்டிக் கொடுக்கிறார்கள். அந்தக் கொள்ளையரிடமிருந்து நாட்டை நாம் பாதுகாக்க வேண்டுமென்கிறோம். காமராசர்கள், 'கொள்ளையடிப்பதற்குத்தான் நாங்கள் உதவுவோம்' என்கிறார்கள். இந்த நிலையிலிருந்து நமது நாட்டைக் காப்பாற்ற வேண்டும்—நமது நாட்டுச் செல்வத்திற்குப் பாதுகாப்பு வேண்டும் என்பதுதான் தி. மு. கழகத்தின் இலட்சியமாகும். அதற்காகத்தான், 'திராவிட நாடு திராவிடருக்கு ஆகவேண்டும்' என்று நாம் கூறுகிறோம்.

வடவர் வேட்டையால் நாடு சுடுகாடாகிவிடும்

"இன்னும் தொடர்ந்து இந்த நாட்டு மக்கள் அப்பாவிகளாக—வாயற்ற பூச்சிகளாக இருப்பார்களேயானால் இந்த நாடு சீக்கிரமே வடவரின் வேட்டையால் சுடுகாடாகிவிடும்."

யுத்தம் வந்தால்!

'எவருக்கும் தளவாடங்கள் தர மாட்டேன்'

பண்டாரநாயகா கூறுகிறார்

கொழும்பு, செப். 20—'யுத்தம் ஒன்று ஏற்படுமானால், அப்போது இலங்கையில் உள்ள இராணுவத் தளங்களை எந்த ஒரு வல்லரசும் உபயோகித்துக் கொள்ள அனுமதிக்க மாட்டேன்'' என்று இலங்கைப் பிரதமர் பண்டாரநாயகா கூறியிருக்கிறார்.

'நான் ஐ. நா. பொதுச் சபைக் கூட்டத்திற்குச் செல்லும்போது, அதுவரை சூயஸ் கால்வாய் தகராறு தீர்க்கப்படாமல் இருக்குமானால், தகராறைத் தீர்ப்பதற்கான சமாதான பரிகாரம் ஒன்றை என்னுடன் எடுத்துச்செல்வேன்' என்றும் அவர் கூறினாராம்.

நேரு—நாசர் கடிதப் போக்குவரத்து

இரகசியத் தஸ்தாவேசுகள் திருடு போயின

புதுடில்லி, செப் 20—சூயஸ் பற்றி நேருவுக்கும்—நாசருக்குமிடையே நடைபெற்ற கடிதப்போக்கு-வரத்துகள் அடங்கிய இரகசிய 'பைல்'கள், இந்திய அரசாங்க வெளிநாட்டு இலாகாவிலிருந்து திருடுபோய் விட்டனவாம்; அந்தப் பிக்கார்டுகளிலிருந்த விஷயங்கள் அன்னிய ஏஜெண்டு ஒருவருக்குத் தரப்பட்டனவாம். இது சம்பந்தமாக ஒரு குமாஸ்தாவும், அவரது மனைவியும் போலீசாரால் கைது செய்யப்பட்டுள்ளனவாம்; பாதி எரிந்துபோன 'பைல்'களையும் அவர்களிடமிருந்து கைப்பற்றியதாகப் பத்திரிகையொன்றில் செய்தி கூறப்பட்டுள்ளது.

காஷ்மீரில் பொது தேர்தல்!

குதிரைகள்மீது ஓட்டுச்சாவடிகள்?

புதுடில்லி, செப். 20—காஷ்மீரில் நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலின்போது, வாக்காளர்கள் வசிக்கும் ஜம்மு, காஷ்மீர் மலைப்பகுதிகளுக்கு வாக்காளர் பதிவு செய்யும் பெட்டிகளைக் குதிரைமீது எடுத்துச் செல்லத் தேர்தல் அதிகாரிகள் முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது.

தேர்தல் எப்போது என்று குதிரை மீதிருந்து முரசு கொட்டி, முன்னதாக மக்களுக்கு அறிவிக்கப்படுமாம். இந்தப் புதிய முறையினால், மலைப் பகுதிகளில் வாழும் மக்களுக்கு வாக்குகளைப் பதிவு செய்ய நல்ல வசதியுண்டாகுமென நம்பப்படுகிறது.

செங்கோட்டை தாலுகா

'திருநெல்வேலியிலேயே இருக்க வேண்டும்'

செங்கோட்டை மக்களின் தூதுக் குழு ரெவின்யூ போர்டு முதல் மெம்பர் எம். ஆர். சுப்பிரமணியத்தை சந்தித்து, 'செங்கோட்டை, திருநெல்வேலி மாவட்டத்தில் தனித் தாலுகாவாக இருக்க வேண்டும்' என்றும், புதிய கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கக்கூடாது என்றும் கேட்டுக் கொண்டனர் எனத் தெரியவருகிறது.

நஷ்டஈடு அளிக்காமல் ஜமீன் ஒழிப்பாம்!

டாக்கா, செப். 19—கிழக்கு பாகிஸ்தானில் நஷ்டஈடு அளிக்காமலேயே ஜமீன்களை எடுத்துக்கொள்ள அரசாங்கம் விரும்புவதாக நிதிஅமைச்சர் சட்டசபையில் தெரிவித்துள்ளாராம்.

தூத்துக்குடியில் விடுதலை நாள்

கே. வி. கே. சாமி, எம். எஸ். சிவசாமி, என். எஸ். இளங்கோ கலந்துகொண்டனர்

16—9—56ல் தூத்துக்குடியில் திராவிட நாடு விடுதலை நாள் பொதுக்கூட்டம் சந்தனமாரியம்மன் கோவில் திடலில் தோழர் எம். எஸ். சிவசாமி தலைமையில் நடந்தது. நெல்லை மாவட்டச் செயலாளர் தோழர் கே. வி. கே. சாமி, தோழர் என். எஸ் இளங்கோ ஆகியோர் சொற்பொழிவாற்றினர். கூட்டத்தில், பாளையங்கோட்டை ரோட்டிலுள்ள சுடுகாட்டில் ஒவ்வொரு சாதிக்கென்று தனித் தனியே இடம் பிரித்திருப்பதைக் கண்டித்தும், தூத்துக்குடியில் சாதிப் பெயரால் இருக்கும் தெருக்களின் பெயருக்குப் பதில் நல்ல தமிழ்ப் பெயர்கள் இடவேண்டும் என்று கேட்டுக்கொண்டும், மும்முனைப் போராட்டத்தின்போது சிறை சென்ற தோழா காசியை மொட்டை அடித்தும், அடித்து இம்சித்தும், மதுரை சிறையிலிருந்து திருச்சி சிறைக்கு மாற்றி இருக்கும் தவறான போக்கைக் கண்டித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. தோழர் என். எஸ். இளங்கோவுக்கு நகர தி. மு. கழகம், போல்நாய்க்கன்பேட்டை, சுப்பிரமணியபுரம் தி. மு கழகக் கிளைகள், மஜீத் மன்றம் ஆகியவை சார்பில் கைத்தறித் துண்டுகளும், போல்டன்புரம் தி மு. கழகச் சார்பில் மாலையும் அணிவிக்கப்பட்டது.

புதுக்கோட்டை திருக்குறள் கழகம்

16—9—56-ல், மேற்படி கழகச் சார்பில் நடைபெற்ற கூட்டத்தில், 'பண்டைத் தமிழர் கண்ட செந்நெறி' என்ற தலைப்பில், கரூர் நகராண்மைப் பள்ளித் தலைமைத் தமிழாசிரியர் திரு. ஆ குருசாமி அவர்கள் பேசுகையில், 'நம் இனம் எது?—நம் மொழி எத்தகு வளமுடையது?—நம் பண்பாடு எத்தன்மைத்து?—என்பவைகளை எல்லாம் தமிழர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்; அப்படிச் சிந்திப்பதற்குத் தமிழர்கள் முனைந்துவிட்டால், நிச்சயமாகத் தமிழகம் எதிர்காலத்தில் எழுச்சி பெறும்' என்று குறிப்பிட்டார்.

தமிழ் நாடு மருத்துவச்சாலை திறப்பு

17—9—56 காலை 9 மணிக்கு, கச்சிராயபாளையத்தில், டாக்டர் கே. பி. இராமகுட்டி அவர்களை மருத்துவராகக்கொண்டு தோழர் ஆர். சிங்காரம் அவர்கள் தலைமையில் தோழர் வே. விநாயகத்தான் அவர்களால் 'தமிழ் நாடு மருத்துவச்சாலை' திறந்துவைக்கப்பட்டது. மருத்துவர்கள் எப்படி நோயாளிகளிடம் நடந்துகொள்ள வேண்டும்—அவர்களைக் கவனிக்க வேண்டும் என்பவை குறித்துத் தோழர்கள் கே. பி. நெடுமாறன், ஆ. சானகிராமன் சொற்பொழிவாற்றினர். பல ஊர்களிலிருந்தும் பொது மக்கள் திரளாக வந்திருந்து சிறப்பித்தனர். வெண்பொற்காசுகளையும் மருத்துவக் கருவிகளையும் பரிசாக வழங்கி டாக்டர் அவர்களைப் பாராட்டினர். டாக்டர் அவர்கள் நன்றிகூற விழா சிறப்பாக முடிவுற்றது. இவ்விழாச் சிறப்பு நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2 நன்கொடை தரப்பட்டது. வரப்பெற்றோம் — நன்றி — பொறுப்பாளர்.

நாகை ஆபரணத் தொழிலாளர் சங்கம்

நாகப்பட்டினம் ஆபரணத் தொழிலாளர்கள், சாதி, மத வேறுபாடின்றித் தொழிலை அடிப்படையாகக்கொண்டு ஆபரணத் தொழிலாளர் சங்கம் என்ற ஒரு சங்கம் தோழர் ஏ. டி. சாமி அவர்கள் தலைமையில் அமைத்துள்ளனர். சங்கத்தின் நோக்கத்தைக் குறித்துத் தோழர்கள் கே. சண்முகம், ஆதி புராணபத்தர், மற்றும் பலர் பேசிய பின் நிர்வாகக் குழுவும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

அண்ணாமலைநகர் தி.மு.க. மாணவர் கிளை

10—9—56 ல், அண்ணாமலை நகர் தி. மு. கழக மாணவர் கிளை பொது உறுப்பினர் கூட்டம் செயலாளர் தோழர் து. சோமசுந்தரம் தலைமையில் நடைபெற்றது. அக்கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தி. மு. கழக மத்தியச் செயற்குழு, தேர்தல் நிதிக்கு ரூ. 5 இலட்சம் திரட்டுவதென மேற்கொண்ட தீர்மானத்தை மகிழ்ச்சியுடன் வரவேற்பதுடன், அந்நிதித் திரட்டுவதற்குத் தங்களால் ஆவன செய்வதென்றும், ஆங்காங்குள்ள மாணவர் கிளைகளையும் மாணவர்களையும் பொதுமக்களையும் ஒத்துழைப்புத் தரவேண்டுமெனவும் கேட்டுக்கொள்கிறது;

அண்ணாமலைநகர், தில்லை (சிதம்பரம்) முதலிய இடங்களிலுள்ள உயர்நிலைப் பள்ளிகளில் மாணவர் கிளையினை அமைக்க, தோழர்கள் பு. இராமசாமி, க. சிங்காரவேலு, க. பாலகிருட்டினன், ந. முத்துசாமி, வீ. இராசகோபாலன் ஆகியோரடங்கிய தனிக் குழு ஒன்று நிறுவப்பட்டது.

14—10—56-ல் அண்ணா அவர்களைக்கொண்டு ஆங்கிலச் சொற்பொழிவு நடத்துதல் 21-10-56-ல் ஒரு சிறப்புச் சொற்பொழிவும், 28—10—56-ல் இசையரங்கும் நடத்துவது.

தேர்தல் நிதி திரட்டுவதற்கான திட்டங்கள் வகுக்கவும், சிறப்புச் சொற்பொழிவுகள் நடத்தவும், அதற்காகக் குறிப்பிட்டவர்களையும் தேதியையும் மாற்றச் செயலாளருக்கு உரிமை அளிக்கப்பட்டது. அத்துடன், இது சம்பந்தமாக வேண்டிய ஆலோசனைகளையும் உதவியையும் பெறுவதற்குப் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், அண்ணா இவர்களிடம் தொடர்பு வைத்துக்கொள்ளுமாறு செயலாளரைக் கேட்டுக்கொள்கிறது.

அக்டோபர் திங்களில் மேற்குறிப்பிட்ட சிறப்புச் சொற்பொழிவுகள், இசை நிகழ்ச்சிகளின் மூலம் கிடைக்கும் தொகையைத் தி. மு கழகத் தேர்தல் நிதிக்குத் தருவதெனவும், மற்றும் சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

சினிமா கொட்டகையில் புகை பிடித்தல்

'சட்ட விரோதமானதென்று கூறமுடியாது' எனத் தீர்ப்பு

ஐதராபாத், செப். 19—"சினிமா கொட்டகைகளில் புகை பிடித்தல் சட்டவிரோதமானதென்றோ, பொதுமக்களுக்கு இடையூறான செய்கை என்றோ கூறமுடியாது,"

என்றுகூறி, சினிமா கொட்டகையில் புகைபிடித்ததற்காகப் போலீசார் தொடர்ந்த வழக்கை நிராகரித்து ஐதராபாத் நீதிமன்றம் ஒரு வழக்கில் தீர்ப்பளித்துள்ளது.

'கொட்டகையில் புகை பிடிப்பதை பக்கத்திலோ, அருகாமையிலோ உள்ளவர்கள் தங்களுக்கு இடையூறாக இருக்கிறது என்று கூறி ஆட்சேபித்தாலேயே புகை பிடித்தல் குற்றமாகும்' என்று தீர்ப்பில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

பின்னடைந்த வகுப்பினரின் நிவாரணத்திற்காக இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 90 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது; முதலாவது திட்டத்தில் இதற்கு ரூ. 39 கோடிதான் ஒதுக்கப்பட்டிருந்தது.

'ஜனசக்தி'யின் 'முற்போக்கு வாதம்'

"......எதிர்ப்பு வாக்குகள் கூறுபடாமல் கிடைக்க எதிர்க்கட்சிகளிடத்தில் உடன்பாடு அவசியமென்றும் கூறுகிறார் ஜே. பி."

"இது மறுக்க முடியாத உண்மை. எதிர்ப்பு வாக்குகளில் சாதிவாத, மதவாத, பிற்போக்குவாத வாக்குகள் ஒரு சிறு பகுதியாயிருப்பினும், மிகப் பெருவாரியான வாக்குகள் ஜனநாயக உணர்ச்சிகளை பிரதிநிதிப்படுத்தும் வாக்குகள் தான்"

★

ராஜா மெச்சிய ரம்பை!

"கம்யூனிஸ்டுகளுக்குப் பாராளுமன்ற ஜனநாயகத்தில் நம்பிக்கை இல்லை என்று அவர்கள் இன்னும் சந்தேகப்படுவது சரியல்ல; கடந்த 5 ஆண்டுகளில் பாராளுமன்றத்திலும் சட்டசபைகளிலும், வெளியில் தேசிய, வெகு ஜனப் போராட்டங்களிலும் பி. சோ.-வுடன் ஆக்கப் பூர்வமாக ஒத்துழைத்து வந்திருப்பது, வருவது, அந்த சந்தேகத்தைப் போக்கி இருக்க வேண்டும். வருங்கால நடைமுறை அனுபவம் அந்தச் சந்தேகத்தை நிச்சயமாகப் போக்கும் என்ற நம்பிக்கை நமக்குண்டு."

—'ஜனசக்தி' : 19-9-56

பதவி கிடைத்ததும்!

வெறும் மரக்கட்டையாக மாறவேண்டுமாம்

சென்னை, செப். 19—"பாராளுமன்றத்திற்கோ, சட்டசபைக்கோ நுழைந்த பின் இந்தியா என்ற உணர்ச்சி மட்டும் தான் இருக்கவேண்டும். உங்கள் தொகுதியைப் பற்றி நினைப்பது கூடாது.

"ஒரு தனிப்பட்ட வகுப்பிற்காகவோ, பிரிவிற்காகவோ சிந்திப்பது கூடாது,"

என்று இந்தியப் பாராளுமன்றத் தலைவர் அனந்தசயனம் அய்யங்கார் சென்னை நகர சபை மேயர் அளித்த வரவேற்பின்போது பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் பேசுகையில், மாநில உணர்ச்சியைக் கண்டித்து இந்தியா நெடுங்காலமாக அரசியல், பொருளாதாரம், நாகரீகம், பண்பாடு ஆகிய அடிப்படைகளின்படி ஒரே நாடுதான் என்றும் பெரியதொரு புளுகையும் கூறினாராம்!

15 அங்குல நீளமுள்ள

பறக்கும் மீன்!

கொல்லம் கடற்கரையில் பிடிபட்டதாம்

கொல்லம், செப் 20—பறக்கும் மீன் ஒன்று இந்தப் பிரதேசத்திலேயே முதன்முதலாகப் பிடிக்கப்பட்டிருக்கிறதாம்!

கடற்கரையில் நின்றுகொண்டிருந்த இளைஞர் ஒருவர், கடலிலிருந்து தரையை நோக்கி 5 அடி உயரத்தில் பறந்து வந்துகொண்டிருந்த இந்த மீனைக் கண்டாராம்.

பறந்துவந்த இந்த மீன் தரையில் விழுந்ததும் அதனைப் பிடித்து, அருகிலிருந்த நாராயண கல்லூரியின் மிருகசாஸ்திர ஆராய்ச்சிக் கூடத்தில் சேர்ப்பித்தாராம்.

15 அங்குல நீளமுள்ள இந்த மீனுக்கு 6 அங்குல நீளமுள்ள இரண்டு இறக்கைகள் இருப்பதாயும், இது பறக்கும் போது ஒரு பொம்மை விமானம்போலத் தெரிவதாயும் கூறப்படுகிறது.

இயற்கை உற்பாதங்கள்

கரீம்கஞ்ச், செப். 20—'அசாம் மாநிலத்தில் கரீம்கஞ்ச் என்னும் இடத்தில் சில விநாடிகள் நில நடுக்கம் ஏற்பட்டது; உயிருக்கு ஆபத்தோ பொருள் சேதமோ ஏற்படவில்லை' என்று அறிவிக்கப்படுகிறது.

* * *

டோக்கியோ, செப். 20—ஜப்பான் தீவில் உள்ள இரண்டு பெரிய எரிமலைகள் நேற்று வெடித்தன.

மத்திய ஜப்பானில் உள்ள அசாமா மலையில் உள்ள எரிமலை வெடித்ததினால் உயிர்ச்சேதம் ஒன்றும் ஏற்படவில்லை. தென் பகுதியில் சகுராஜிமா எரிமலை மூன்று முறை வெடித்தது.

இதுவரை இந்த எரிமலை 101 முறை வெடித்துள்ளதாகத் தெரிகிறது.

நிபுணர்கள் கூற

வேண்டியதுதான் பாக்கியாம்

சேலம், செப். 20—'சாத்தியமானதுதான்' என்று தொழில் நிபுணர்கள் கூறுவார்களேயானால், சேலத்தில் ஒரு பெரிய இரும்பு உருக்குத் தொழிற்சாலை அமையும்—என்று மத்திய கனரகத் தொழில் இலாகா மந்திரி எம். எம். ஷா இங்கு கூறினாராம்.

'பெருமை' பேசுகிறாரா?

சென்னை, செப். 20—சீனா, ஜப்பான் போன்ற நாடுகளில் இன்னமும் உணவுக் கட்டுப்பாடு இருப்பதாகவும், பண்டங்களின் விலை இந்தியாவில் உள்ளதைவிட 40 சதவிகிதம் அதிகம் என்றும் இந்திய அரசாங்க உதவி உணவு மந்திரி கூறியிருக்கிறார்.

ஐதராபாத்தொழிற்சாலையில் டில்லியின் பங்கு

ஐதராபாத், செப். 20—ஐதராபாத் அரசாங்கம் நடத்தும் இயந்திரக் கருவிகள் உற்பத்தித் தொழிற்சாலையின் பங்குகளில் மத்திய அரசாங்கம் ரூ. 75 இலட்சம் முதல் ரூ. ஒரு கோடி பெருமானவற்றை வாங்க முடிவு செய்திருக்கிறது.

விவசாய தொழிலாளருக்கு வசதிகள் தர சிபாரிசு

புதுடில்லி, செப். 20—விவசாயத் தொழிலாளருக்கு வேலை நேரத்தை நிர்ணயிக்கவும், ஓய்வுக்கான இடைவேளையைக் குறிப்பிடவும், இந்தியக் குறைந்தபட்ச ஊதிய ஆலோசனைக் குழு டில்லி அரசாங்கத்திற்குச் சில சிபாரிசுகள் செய்துள்ளதாகத் தெரியவருகிறது.

சென்னைக்குப் பர்மா அரிசியாம்!

சீக்கிரமே விலை ஏற்றம் தடுக்கப்பட்டுவிடுமாம்!

அரிசி விலையைக் கட்டுப்படுத்தி ஒரு நிலைப்படுத்துவதற்காகச் சீக்கிரமே ஏராளமான புழுங்கல் அரிசியும், பச்சரிசியும் மார்க்கெட்டில் கிடைக்கும்படி செய்யப்படும் என்றும், பர்மாவிலிருந்து வருகிற அரிசி இங்கு அனுப்பிவைக்கப்படும் என்றும் மத்திய உதவி உணவு மந்திரி எம். வி. கிருஷ்ணப்பா கூறியிருக்கிறார்.

சென்னை மாநில உணவு மந்திரியையும் அதிகாரிகளையும் கலந்து பேசிய பின்னரே அவர் இந்த தகவலைத் தந்துள்ளார்.

பத்திரிகையாளரிடம் பேசிய பக்தவத்சலம், சீக்கிரமே தஞ்சையிலிருந்து சுமார் 75 டன் குறுவை கிடைக்கவிருக்கிறது என்றும், அப்போது பல மாவட்டங்களிலும் விலை ஏற்றம் தடுக்கப்பட்டுவிட முடியும் என்றும் கூறினாராம்.

'தேவாலயம்' — நாடகம்

அண்ணா தலைமை தாங்கினார்

சென்னை குறள்நெறி நாடக மன்றத்தார், தி. மு. கழகத் தேர்தல் நிதிக்காக 15—9—56 மாலை செயிண்ட் மேரி மண்டபத்தில், தோழர் எஸ். எஸ். தென்னரசு தீட்டிய 'தேவாலயம்' எனும் சமூக நாடகத்தை நடத்தினர். நாடகத்திற்கு அண்ணா அவர்கள் தலைமை வகித்துப் பேசுகையில், குறள்நெறி நாடக மன்றத்தாரின் கலைத்துறை ஆர்வத்தைப் பாராட்டினார்.

பாரதி விழா

15—9—56 மாலை 6-30 மணி அளவில், சென்னை—இராயபுரம் இலக்கிய மன்றச் சார்பில் கல்மண்டபம் நகராண்மைக் கழக ஆண்பள்ளியில், திரு. அ. ஞானசுந்தரம் தலைமையில் மேற்படி விழா நடைபெற்றது. தோழர்கள் ஐ. மாயாண்டிபாரதி, அ. முனுசுவாமி, மு. செ. செப்பிரகாசம் த. சே. உமாபதி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்

திருமணம்

18—9—56 காலை சென்னை—திருவொற்றியூரில், தோழர் கா. அப்பாதுரை தலைமையில் தோழர் சி. கோ. சுந்தரம்—தோழியர் மல்லிகேசுவரி திருமணம் நடைபெற்றது. அண்ணா அவர்களும், பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், தோழர்கள் சி. ஆர். பாலசுந்தரம், வி. எஸ். கோவிந்தராசன் ஆகியோரும் மணமக்களைப் பாராட்டிப் பேசினர்.

ஏராளமான கழகத் தோழர்கள், உறவினர், நண்பர் ஆகியோர் மணவிழாவில் கலந்து சிறப்பித்தனர். இத்திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 25 நன்கொடை தரப்பட்டது — வரப்பெற்றோம் — நன்றி — பொறுப்பாளர்.

நன்றி அறிவிப்பு

தங்களது திருமண விழாவிற்கு வந்திருந்து சிறப்பித்த அனைவருக்கும், வாழ்த்துரை வழங்கிய அண்ணா, பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் மற்றும் தோழர்களுக்கும், பரிசுகள் வழங்கியோருக்கும் மணமக்கள் தோழர் சி. கோ. சுந்தரம்—தோழியர் மல்லிகேசுவரி தங்கள் உளங்கனிந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

ஃ ஃ ஃ

7—9—56-ல் கொளையன்கரிசல் கிராமத்தில், திருவள்ளூர் தோழர் மா. கலியாணசுந்தரம்—தோழியர் க. சண்முகக்கனி அம்மையார் திருமணம் நடைபெற்றது. இத்திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது — வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

பிறப்பு

16—9—56-ல், புளியங்குடி தி. மு. கழகத் தோழியர் அன்னமணி அவர்களுக்கு ஒரு ஆண் மகவு பிறந்தது. அக்குழந்தைக்கு டாக்டர் சேதுராஜ் அவர்களால் 'இராவணன்' என்று பெயர் சூட்டப்பட்டது. இது நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ 1 நன்கொடை தரப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

• • •

11—9—56 இரவு 11-மணிக்கு சென்னை-இராயப்பேட்டை தி. மு. கழகத் தோழர் மு. அரங்கநாதன் அவர்களின் துணைவியார் ஒரு பெண் மகவுக்குத் தாயானார். தாயும் சேயும் நலம், இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

தெரிந்து கொள்ளுங்கள்

கொழும்புத் திட்டத்தின் கீழ் இந்தியாவிலுள்ள 80 கல்வி நிலையங்களில் 253 அயல் நாட்டு மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர்.

திராவிட நாடு விடுதலை நாள் பொதுக்கூட்டங்கள்

★

காஞ்சீபுரம் :

23—9—56 மாலை 6 மணிக்கு, செங்கைகொண்டான் மண்டபத்தில், தோழர் இரா. வெங்கடேசன் தலைமையில் நடைபெறும்; தோழர்கள் ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ., காஞ்சி-கல்யாண சுந்தரம் ஆகியோர் பேசுவர்.

சென்னை 14-வது வட்டம்:

23—9—56 மாலை 6 மணிக்கு, ஆச்சாரப்பன் சந்து—கொத்தவால் சாவடி அருகில், தோழர் ஆர். இராசமாணிக்கம் தலைமையில், தோழர்கள் சி. பி. சிற்றரசு, ஏ. கே. வில்வம், கோ. செங்குட்டுவன் ஆகியோர் பேசுவர்.

சென்னை 42-வது வட்டம்:

23—9—56 காலை 9 மணிக்கு, கழகப் பணிமனையில் தோழர் அ. பொ. அரசு எம்.சி., தலைமையில் நடைபெறும்; தோழர் டி. வி. நாராயணசாமி பேசுவார். நண்பகல் 2 மணிக்கு, தோழர் எம். எம். ஹயாத் எம்.சி., தலைமையில் ஏழைகளுக்கு உணவு அளிக்கப்படும். (எண் 4, நமசிவாயமுதலி தெரு, திருவல்லிக்கேணி.)

சென்னை—வண்ணை :

23—9—56 காலை 10 மணியளவில், சென்னை—வண்ணை இளங்கோ கலைமன்றச் சார்பில் தோழர் மூர்த்தி அவர்கள் தலைமையில் நடைபெறும். தோழர் கே. வி. கே. சாமி அவர்கள் திடீர் மறைவுக்கு அனுதாபக் கூட்டமும் நடைபெறும்.

சென்னை-24-வது வட்டம்:

23—9—56 காலை 9 மணிக்கு குயப்பேட்டை, திரு. வி. க. மறுமலர்ச்சி மன்றம், தி. மு. கழகம் ஆகியவைகளின் சார்பில் நடைபெறும்; தோழர் மணி தலைமையில் மாபெரும் சைக்கிள் ஊர்வலம் ஒன்று பேட்டையின் முக்கிய வீதிகளின் வழியாகப் பவனி வரும்.

திண்டுக்கல் :

23—9—56 மாலை 5 மணிக்கு வ. உ. சி. திடலில், திரு க. வேலாயுதனுர் தலைமையில் நடைபெறும்; மதுரை மாவட்டச் செயலாளர் எஸ். முத்து, கே. எஸ். சந்தானம், ஏ. சுப்பையா, என். முத்து ஆகியோர் பேசுவர்.

திருப்பதி :

23—9—56 மாலை 5-30 மணியளவில் தோழர் கே. ஆர். சந்திரன் தலைமையில் நடைபெறும்; தோழர்கள் சி. வி. த. வேலன், பு. வை சீனிவாசன், சி. கோவிந்தசாமி ஆகியோர் பேசுவர்.

கரிசல்பட்டி :

23—9—56ல் தோழர் பால கிருட்டிணன் தலைமையில் நடைபெறும்; தோழர்கள் எம். ஏ. இரசாக், க. ம. வ. நடராசன், வேலன், பிச்சை ஆகியோர் பேசுவர்.

சின்னவாகைக்குளம் :

25—9—56ல் இங்கு விழா நடைபெறும்; தோழர்கள் எம். ஏ. இரசாக், க. ம. வ நடராசன் ஆகியோர் பேசுவர்.

வாலாசாபாத் :

23—9—56 மாலை 5-30 மணிக்கு இராச வீதியில், தோழர் பி. பொன்னுசாமி தலைமையில் நடைபெறும்; தோழர்கள் என். சீவரத்தினம், வி. சம்பந்தன், டபிள்யூ. கே. இரத்தினவேலு, ப. கனகசபை ஆகியோர் பேசுவர்.

விச்சந்தாங்கல் கிராமத்தில் தி. மு. கழகத் துவக்கம்

25—9—56 மாலை 5-30 மணிக்கு காஞ்சிபுரத்திற்கு அடுத்த விச்சந்தாங்கல் (சாலூர்) கிராமத்தில், தோழர் சி. வி. எம். அண்ணாமலை தலைமையில், தி. மு. கழகத் துவக்க விழா நடைபெறும்; தோழர்கள் சி. பி. சிற்றரசு, மாவட்டச் செயலாளர் டி. என். சம்மந்தம், டி. சீனிவாசன் ஆகியோர் பேசுவர்.

க. அன்பழகன் சுற்றுப்பயணம்

செப். 23 : கள்ளக்குறிச்சி
24 : குறிஞ்சிப்பாடி

தாழ்த்தப்பட்டோர் சம்மேளனத் தொண்டர்கள் மாநாடு

23—9—56 பகல் 2 மணிக்கு அரக்கோணத்தை அடுத்துள்ள மங்கம்மாள் பேட்டையில் தாழ்த்தப்பட்டோர் சம்மேளனத் தொண்டர்கள் மாநாடு நடைபெறும்.

அணுசக்தி மாநாடு ஆரம்பமாகிவிட்டது

நல்ல சூழ்நிலை ஏற்படுவதற்கு ரஷ்யப் பிரதமர் தரும் செய்தி

நியூயார்க், செப். 20—

உலக நாடுகளின் அணுசக்தி மாநாடு இன்று ஐ. நா. தலைமைக் காரியாலயத்தில் ஆரம்பமாயிற்று. இந்த மாநாட்டில் 81 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். மாநாடு அக். 25, 26-ந் தேதி வரை நடைபெறும்.

அமைப்புத் திட்ட நகல் ஒன்று தயாரித்து, அமெரிக்கத் தலைவர் ஐசனோவர் மாநாட்டில் கலந்து கொள்வார் என்று தெரிகிறது.

ரஷ்யப் பிரதமர் புல்கானின் அனுப்பியுள்ள செய்தியொன்றில், 'அணுகுண்டு, நீர்வளிக் குண்டு தடை செய்யப்பட்டால், ஆக்க வேலைகளுக்கு அணுசக்தியைப் பயன்படுத்துவதற்கு நல்ல சூழ்நிலை ஏற்படும்' என்று கூறியிருக்கிறார்.

கழகக் கூட்டம்

★

மணமேல்குடி :
அண்ணு திடலில்
24—9—56 மாலை 6 மணிக்கு
பேசுபவர் : கண்ணதாசன்

அரிசியின் விலை குறையும்வரை !

டில்லிக்குத் திரும்ப மாட்டாராம் !

சென்னை, செப். 20—

சென்னை, மைசூர், திரு-கொச்சி மாநிலங்களில் மட்டும் 3,000நியாய விலைக் கடைகள் திறக்கப்பட்டிருப்பதாகவும், மீண்டும் பங்கீட்டுக் கட்டுப்பாடு விதிப்பதாக உத்தேசமில்லை என்றும், அரிசி விலை இப்போது அதிகமில்லை என்றும், 'பற்றுக்குறை—பட்டினிச் சாவு' என்பது உண்மையில் இல்லை என்றும், பர்மா, அமெரிக்கா ஆகிய நாடுகளிலிருந்து இறக்குமதிமூலம் 60 இலட்சம் டன் உணவுத் தானிபங்களை ரிசர்வில் சேமித்துவைக்க சர்க்கார் திட்டமிட்டிருக்கிறது என்றும், விலைகள் குறையும்வரை தான் டில்லிக்குத் திரும்பப் போவதில்லை என்றும் இந்திய அரசாங்க உணவு அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

நாசர்—நேரு சந்திப்பு?

புதுடில்லி, செப். 21—

சவூதி அரேபியாவில் நேரு-நாசர் சந்திப்பு நடைபெறுவது நிச்சயமென்றும், அரபு நாடுகளின் தலைவர்களின் மாநாடு ஒன்று நடைபெறுமென்றும், மாநாட்டில் நாசரும் கலந்து கொள்வார் என்றும் செய்திகள் கூறுகின்றன.

சிக்கல் தீருவதற்குப் புதியதோர் திட்டம் உருவாகும் ?

கெய்ரோ, செப். 21—

நாசருடன் பேசிவிட்டு இலண்டனுக்கு வரவிருக்கும் கிருஷ்ண மேனன் சூயஸ் தகராறில் ஒரு முடிவு காண்பதற்கான புதியதோர் திட்டத்தை அளிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறதாம்.

பாதுகாப்புத் துறை ஊழியர்கள் வேலை நிறுத்தம்

பாதி அளவு வெற்றி பெற்றனராம்

புனு, செப். 21—

கிர்கியில் உள்ள பாதுகாப்புத் துறை ஊழியர்கள் 17,000 பேரில் 8,000 பேர், அகில இந்திய சிவில் பாதுகாப்புத் துறை ஊழியர் சங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்க வேலை நிறுத்தம் செய்திருக்கின்றனராம்.

வேலையின்றிச் சோம்பிக் கிடப்பதாகக் கூறப்பட்டு 6,000 தொழிலாளர்கள் வேலைநீக்கம் செய்யப்பட்டு வருவதை எதிர்த்தே இந்த வேலைநிறுத்தம் செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

கிர்கியிலுள்ள அந்தத் தொழிற்சாலையில் சுமார் 12,000-த்திற்கும் அதிகமான ஊழியர்கள் பணியாற்றிவருகின்றனர் என்றும், அவர்களில் 6,000 பேர் மட்டுமே இன்று வேலைக்குச் சென்றனர் என்றும், மொத்தத்தில், வேலைநிறுத்தம் பாதி அளவிற்கு வெற்றி பெற்றிருக்கிறது என்றும் மேற்படி சங்கத்தின் சார்பில் கூறப்பட்டிருக்கிறது.

வேலையின்றிச் சோம்பிக் கிடக்கும் 6,000 தொழிலாளர்களில் சுமார் 1,000 பேருக்குமேல் இரயில்வே துறையிலும், அபிவிருத்தித் திட்டத் துறையிலும் வேலைவாய்ப்புகள் கொடுக்கப்பட்டுள்ளனர் என்றும் இன்னும் இரண்டொரு தினங்களில் 300 தொழிலாளர்கள் இதே துறைகளில் வேலைக்கு எடுத்துக்கொள்ளப்படுவர் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

இந்த ஆண்டு இறுதிக்குள்ளாகவே மற்ற ஊழியர்களுக்கும் வேறு துறைகளில் வேலை தேடித்தர தீவிர முயற்சி எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறதாம்.

டில்லி அமைச்சரே நேரில்

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

டாராம்! அங்கு பணிபுரியும் குமாஸ்தா ஒருவரைச் சந்தித்துக் கேட்டபோது, டி. யு. சி. எஸ். அரிசியை விற்ற பின்னரே அரசாங்கத்தின் அரிசியை விற்பதற்கு இந்த நிறுவனம் ஆசைப்படுவதை அமைச்சர் அறிந்தாராம்! அரசாங்கத்தின் அரிசி விற்கப்படவில்லை என்பதை அமைச்சரே நேரில் கண்டார்.

இனி இம்மாதிரி எதும் நடைபெறுமல் அரசாங்கம் தேவையான ஏற்பாடுகளைச் செய்துள்ளதாக திருபர்களிடம் அவர் தெரிவித்துள்ளார்.

ஆட்குறைப்பு செய்யப்பட்ட 1,600 தொழிலாளர்

மாற்றுத் துறைகளில் வேலை தரப்பட்டனராம் !

புதுடில்லி, செப். 19—

தாமோதர் நதிப் பள்ளத்தாக்குத் திட்ட வேலைகளிலிருந்து ஆட்குறைப்புச் செய்வதற்கான முன்னறிவிப்புத் தரப்பட்ட 1,600 மாத ஊதியம் பெறும் தொழிலாளர்களில் 723 பேருக்கு, சர்க்காரின் மற்றத் துறைகளில் வேலை தேடித் தரப்பட்டுள்ளதாகச் சர்க்கார் செய்திக் குறிப்பொன்று தகவல் தந்திருக்கிறது.

இந்த 723 பேர் நீங்கலாக மற்றும் 391 பேர்கள், உருக்கு—இரும்புத் தொழிற்சாலைகளிலும் இரயில்வேயிலும், மற்ற நதி பள்ளத்தாக்குத் திட்டங்களிலும் வேலை பெற்றிருக்கின்றனராம்.

இவர்களைத் தவிர மேலும் 457 பேருக்கு மாற்றுவேலைகள் தேடித்தரவேண்டிய அவசியம் இல்லை என்று கூறப்பட்டிருக்கிறது.

மற்றும் 30 பேர் தங்களுக்குப் பிற நிலையங்களில் வேலை வேண்டாம் என்று கூறி நிராகரித்துவிட்டிருக்கின்றனராம்!

ரூ. 10 கோடி செலவில்

கோவையில் தொழிற்சாலை ?

கோவை, செப் 21—

ரேயான்-நார் தொழிற்சாலையை கோவையில் அமைப்பதற்கு மத்திய அரசாங்கம் உதவியளிக்குமாம்; இதற்கு ரூ. 10 கோடி செலவு செய்யப்படுமாம்.

மேலும், சத்தியமங்கலத்தில் உள்ள தாதுப் பொருட்களைப் பயன்படுத்திக்கொள்ளவும், காகிதக் கூழ் தொழிற்சாலையை அமைக்க நீலகிரியில் கிடைக்கும் வாட்டில் பட்டையைப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்றும், சிமெண்டு தொழிலுக்குச் சிறந்த இடம் தென் இந்தியாதான் என்றும் கனரகத் தொழில் அமைச்சர் கூறியுள்ளார்.

டில்லி செல்லும் இரயிலில் இணைப்பு !

புதுடில்லி, செப். 21—

பிரயாணிகளுக்கு இரயிலில் உணவு வசதியளிப்பதற்குப் புதிதாகத் தயாரிக்கப்பட்டுள்ள ஐந்து பெட்டிகளும் கிராண்டு டிரங்க் எக்ஸ்பிரசுடன் இணைப்பதற்கு ஒதுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

இந்தப் பெட்டிகள் கிழக்கு இரயில்வே தொழிற்சாலையில் செய்யப்பட்டவையாகும்.

★★★

தலைமை நிலையச் செய்தி :

தேர்தல் ஆய்வுக் குழுச் சுற்றுப்பயணம்

★

பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும் தேர்தல் ஆய்வுக்குழு உறுப்பினர்களான தோழர்கள் ஈ. வெ. கி. சம்பத், ஏ. வி. பி. ஆசைத்தம்பி, என். வி. நடராசன், கே. ஏ. மதியழகன் ஆகியோரும் அக்டோபர் திங்கள் 12-ம் நாளிலிருந்து 23-ம் நாள்வரை கீழ்க்கண்ட தமிழகத்தின் குறிப்பிட்ட இடங்களுக்கு மட்டுமே சென்று தங்கியிருந்து, அந்த இடங்களைச் சுற்றியுள்ள தொகுதிகளைச் சார்ந்த கழகத் தோழர்களையும், கழக ஆதரவாளர்களையும் சந்தித்துப் போதுத்தேர்தல் சூழ்நிலை குறித்து விவரம் அறிவார்கள்.

ஆய்வுக் குழு செல்லும் இடங்கள்:

அக்டோபர்			அக்டோபர்		
12 :	காஞ்சிபுரம்	.... காலை 9 மணி	17 :	பெரியகுளம்	.... மாலை 6 மணி
,,	வேலூர்	.... மாலை 6 ,,	18 :	மதுரை	.... காலை 9 ,,
13 :	திருப்பத்தூர்	.... காலை 9 ,,	,,	விருதுநகர்	.... மாலை 6 ,,
,,	கிருஷ்ணகிரி	.... மாலை 6 ,,	19 :	திருநெல்வேலி	.... காலை 9 ,,
14 :	சேலம்	.... காலை 9 ,,	,,	நாகர்கோவில்	.... மாலை 6 ,,
,,	ஈரோடு	.... மாலை 6 ,,	20 :	குற்றாலம்	.... மாலை 6 ,,
15 :	கோயமுத்தூர்	.... காலை 9 ,,	21 :	காரைக்குடி	.... மாலை 6 ,,
,,	உடுமலைப்பேட்டை	.... மாலை 6 ,,	22 :	பட்டுக்கோட்டை	.... காலை 9 ,,
16 :	கரூர்	.... காலை 9 ,,	,,	மாயவரம்	.... மாலை 6 ,,
,,	திருச்சி	.... மாலை 6 ,,	23 :	கடலூர்	.... காலை 9 ,,

23—10—56 அன்று இரவு சென்னை வந்து சேருவார்கள்

தேர்தல் சூழ்நிலை குறித்து விவரம் தெரிவிக்கக்கூடிய அந்தந்தத் தொகுதியிலுள்ள கிளைக் கழகத் தோழர்களும் ஆதரவாளர்களும், அன்புகூர்ந்து அந்தந்த மாவட்டச் செயலாளர்களுடன் தொடர்பு கொள்ள வேண்டுகிறேம்.

குறிப்பு :—தேர்தல் ஆய்வுக்குழு, திட்டமிட்டுள்ளபடி செல்லுமிடங்களில் தொடர்ந்து தன் பணியில் மிகுந்த கவனம் செலுத்தவேண்டியிருப்பதால், எந்த இடத்திலும் எக்காரணங்கொண்டும் பொதுக்கூட்டங்களோ, வேறு பொது நிகழ்ச்சிகளோ ஏற்பாடு செய்ய வேண்டாமென்று கிளைக் கழகத் தோழர்களை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேம்.

'அறிவகம்' சென்னை
23—9—56

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

★★★

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.